பொன்வயல்
ஜெயந்தி தயாரிப்பு
மதராஸ் பிக்சர்ஸ் வெளியீடு
G.H.RAO

பொன் வயல்

நடிகர்கள்

T. R. ராமச்சந்திரன்	—	செங்கோடன்
K. சாரங்கபாணி	—	போலீஸ் சின்னமுத்து
R. S. மனோஹர்	—	பங்காருசாமி, B. A.
V. K. ராமசாமி	—	சிவராமக் கவுண்டர்
K. A. தங்கவேலு	—	எஸ்ராஜ்
புளிமூட்டை	—	சின்னப்பையன்
P. D. சம்பந்தம்	—	பெரியண்ணன்
T. R. B. ராவ்	—	போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர்
T. E. கிருஷ்ணமாச்சாரி	—	நஞ்சண்ணக் கவுண்டர்
K. V. ஸ்ரீனிவாசன்	—	ஜிண்டான்
ராமைய சாஸ்திரி	—	காளியப்பக்கவுண்டர்
K. ஸ்ரீனிவாசன்	—	மருதாசலம்
சந்திரன்	—	சந்திரன்

நடிகைகள்

அஞ்சலி தேவி	—	செம்பவளவல்லி
மைனாவதி	—	பங்கஜா
முத்துலட்சுமி	—	சவால் கண்ணம்மா
குமுதினி	—	மரகதவல்லி

காமு, அம்மாஜி, யோகம், லட்சுமி, சத்தியவதி,
பேபி கிருஷ்ணவேணி

கதை :	—	ஆசிரியர் "கல்கி"யின் பொய்மான் கரடு
திரைக் கதை வசனம் :	—	A. T. கிருஷ்ணசாமி, B. A.
உதவி	—	T. S. கண்ணபிரான் பிள்ளை
பாடல்கள் :	—	சுவாமி சுத்தானந்த பாரதியார் T. K. சுந்தர வாத்தியார்
ஒளிப்பதிவு :	—	நிமாய் கோஷ்
ஒலிப்பதிவு மேற்பார்வை :	—	A. கிருஷ்ணன், B. A.
ரிக்கார்டிஸ்ட் :	—	D. மோஹனசுந்தரம்
எடிட்டிங் :	—	M. K. ரமணி
உதவி :	—	அப்பு & A. மீனாட்சிசுந்தரம்
ப்ராஸஸிங் :	—	விஜயா லாபரடரி G. A. தியாகராஜன்
மேக்கப் :	—	K. V. சுவர்ணப்பா
உதவி :	—	ஜனார்த்தனம் & கங்காதரன்
ஆர்ட் :	—	V. மாதவன் பிள்ளை

சங்கீத மேற்பார்வை :	—	N. P. அப்துல் காதர்
சங்கீத டைரக்ஷன் :	—	துறையூர் ராஜகோபால சர்மா R. ராஜகோபால்
பின்னணிப் பாடல்கள் :	—	கானசரஸ்வதி, ஜிக்கி, K. V. ஜானகி, ஆண்டாள், துறையூர் சர்மா, கோவிந்தராஜன்
பின்னணி இசை :	—	ஜெயந்தி ஆர்கெஸ்ட்ரா
நடன ஆசிரியர் :	—	P. S. கோபாலகிருஷ்ணன்
நடனம் :	—	சுசீலா
தேவேந்திர மேளம் :	—	கரிவலம்வந்தநல்லூர் கருப்பையா & பார்ட்டி
ப்ரொடக்ஷன் எக்ஸிக்யூடிவ் :	—	N. P. அப்துல் காதர்
ப்ரொடக்ஷன் நிர்வாகம் :	—	S. கிருஷ்ணமூர்த்தி

டைரக்ஷன் : **ஏ. டி. கே.**

ஸ்டுடியோ : **வாஹினி**

பூரண உரிமையாளர்கள் :

மதராஸ் பிக்சர்ஸ் சர்க்யூட், சென்னை - 14.

பொன் வயல்

கதைச் சுருக்கம்

சேலம் ஜில்லாவில் பிரசித்திபெற்ற அதிசயக்குன்று "**பொய்மான்கரடு**". அதனருகில் பத்து ஏக்ரா விஸ்தீரணமுள்ள ஒரு பண்ணை இருந்தது. அதன் சொந்தக்காரன் **செங்கோடன்.** அவன் உழைப்பினால் வற்றாத கிணறும் மாறாத விளைவும் வாய்ந்த அந்தப் பண்ணையை எல்லோரும் "**பொன் வயல்**" என்று புகழ்ந்தார்கள்.

செங்கோடன் சேர்த்துவைத்த பணத்தை "கூளாங்காளன் புதையல்" என்றும், பல லக்ஷ ரூபாய் மதிப்புள்ளது என்றும் ஒரு வதந்தி பரவி இருந்தது. செங்கோடன் தனது மாமன் மகள் **செம்பாவை** மணந்து கொள்வதாக இருந்தான்.

கள்ள நாணயம் தயார்செய்யும் **எஸ்ராஜ்** செங்கோடனுடைய புதையலை அபகரிக்கவும், கள்ள நாணய மிஷினை அவன் கிணற்றில் போட்டு அவனைப் போலீஸாரிடம் பிடித்துக்கொடுக்கவும் சூழ்ச்சி செய்தான். அதற்குக் கருவியாகப் படித்துப் பட்டம்பெற்ற **பங்காருவையும், பங்கஜா** என்னும் நாகரீக மங்கையையும் உபயோகித்தான். எஸ்ராஜ் தனது சதிவலையைப் பின்னும்பொழுதே ஹெட்கான்ஸ்டபிள் **சின்னமுத்து** தமது துப்பு வலையை வீசினார். சவால் **கண்ணம்மா** என்னும் நடிகை தந்திர சாமர்த்தியங்களால் அவருக்கு உதவி செய்தாள்.

எஸ்ராஜின் சூழ்ச்சி பலிக்கும் சமயம் செங்கோடனின் காதலி செம்பா குறுக்கிட்டாள். அவளுடைய தீரச் செயலால் புதையல் காப்பாற்றப்பட்டது. ஆனால், பங்காருவைக் கொலை செய்ய முயன்ற குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்டான் செங்கோடன்.

செங்கோடனை விடுதலைசெய்ய செம்பா என்ன செய்தாள்?

துப்பறிய வந்த சின்னமுத்து என்ன செய்தான்?

சவால் கண்ணம்மா செய்த சாகசச் செயல்கள் என்ன?

எஸ்ராஜின் கதி என்ன?

இவைகளை வெண்திரை விளக்கும்.

பாட்டுகள்

கோரஸ்

மாதம் மும்மாரி பொழிஞ்சு வளம் பெருகணும் சாமி
மனம் குளிர தளதளன்னு பயிர் விளையணும் பூமி
மாடு கன்னும் மனைவி மக்களும் நல்லா இருக்கணும் சாமி
வணங்கி நின்னோம் மனமிரங்கி வரம் கொடுக்கணும் சாமி.

பெண்கள் கோரஸ்

காத்தருள வேணுமம்மா கண்ணபுரமாரி
பொய்மான் கரட்டுக் காவல்காரி
உன்னைக் கைதொழுதேன் கோரி
நல்ல நாத்தெடுத்து நடவு நட்டோம்
நல்ல மழைமாரி பெய்யணும்.

பாட்டு

கட்டுக்கொரு மூணு கலம் காணவேணும் தாயே
உந்தன் கருணை செய்குவாயே எங்கள்
கை ராசியும் நீயே—பூச்சி வெட்டுக்கிளி
தொட்டிடாமே விளைய வேணும் தாயே
நல்லா விளைய வேணும் தாயே.

இராகம் - உசேனி - ரூபகம்

ஓங்கி வளர்ந்த பயிர்—மனிதன்
உயிர்க்குயிரானது பார்—கதிர்
தாங்கி வணங்கி கலை நிறைந்தோர்களின்
தன்மையைக் காட்டுது பார்.
பண்ணிய பயிரிலே அவரவர்
புண்ணியம்தான் தெரியும்
வண்ணமுடன் ஓர் வயிற்றில் பிறந்திட்ட
அண்ணன் அவன் தம்பியானாலும் தானென்ன.

2

செங்கோடனும் — செம்பாவும்

செங் : மாடுகளா கர்ளை மாடுகளா
ஜல்தி ஜல்தி மாடுகளா ஓட்டமாய் ஓடுங்கடா

செம் : மாடுகளா ஓட்டமாய் ஓடுங்கடா
பின்னாலே வார வண்டி புதுப்பணக்காரன் வண்டி
முன்னாலே போறதுக்கு முடுக்குறான் முந்தவிடாதே (மாடு)

செங் : நம்ம மாடுகள் பொல்லா மாடுகள்

செம் : நாணயமான ஜோடிகள்

செங் : தும்மினாலுமே துள்ளி ஓடும்

செம் : தூண்டிடாமலே தாண்டவமாடும

செம் : கருவமடக்க பந்தயம் போடுன்னு
கேட்டுப் பார்க்கலாமா

செங் : வலிய சண்டைக்கு போகப்படாது
வந்த சண்டையை விடவும் கூடாது (மாடு)

3

செங்கோடனும் — செம்பாவும்

செம் : நம்ம கலியாணம் ரொம்ப நல்லா நடத்தணும்
நாட்டியமும் சினிமா டட்டா பாட்டும் வச்சு காட்டணும்

செங் : பொய்க்குதிரை ஆட்டம் வச்சா
மொய்க்கும் ஜனக் கூட்டம்

செம் : முத்துச் சரமாலை வைர மூக்குத்தி காதோலை
கல கல கல ஜில் ஜில் வளையல்
காலில் போடும் ஜிலேபி கொலுசு காசுமாலைதான் வேணுமே.

செங் : பயமாகுதே தங்க நகையே மூவாயிரம்
செலவாகுமே எங்கே போவேன்

செம் : என் கையைத் தொடாதே சாமி
உன் காசு பணம் செலவாகும்
முன் சொன்னதெல்லாம் என்ன, இப்போ சொல்லப் போவதும் என்ன

செங் : கோபம் கொள்ளாதே சம்பா, குங்கும சந்தண கும்பா
தேவையான நகைகளெல்லாம் வாங்குறேன்
பன்னீர் செம்பு—பலவித டம்ளர்—வெந்நீர் போட
அண்டா குண்டா—கட்டில் மெத்தை கண்ணாடி பீரோ
சோப்பு சீப்பு ஸ்னோ பவுடரு—வாங்குறேன்
இப்போ வாங்குறேன்.

செம் : நாதஸ்வர மேளம் வச்சு நாகரீகமாய் ஜோடிச்சு
நம்ம கலியாணம் ரொம்ப நல்லா நடத்தணும்.

செம்பாவும் — தங்கைகளும்

பொங்கலோ பொங்கலோ பொங்கல் பொங்கலோ பொங்கல்
பால் பொங்கியே மணம் கமழும் பொங்கலோ பொங்கல்
மங்களம் மிகுந்திடும் தைப் பொங்கலோ பொங்கல்
எங்கள் பண்ணைச் செல்வங்களே உங்களுக்கெல்லாம் இன்றைக்கு (பொ)

காலையிலும் மாலையிலும் கள்ளமின்றி எங்களுக்கு
பால் கொடுக்கும் பசுவுகளே
பச்சிளம் கன்றுகளே பொங்கலோ பொங்கல்,
அல்லும் பகல் பாடுபடும் அன்பான எருதுகளே
ஜல்லிக்கட்டு வேடிக்கைக்கு சரியான காளைகளே
பச்சிளம் கன்றுகளே பொங்கலோ பொங்கல்.

அஞ்சலி செய்தோம் நன்றியை மறவோம் அருமைச் செல்வங்களே
மஞ்சள் குங்குமம் மாலைகள் சூட்டி
மகிழ்ந்தோம் செல்வங்களே
அக் மகிழ்ந்தோம் செல்வங்களே
பொங்கலோ பொங்கல் பொங்கலோ பொங்கல்.

5

சின்னமுத்து

சீனிக் கண்ணாடிப் பாட்டு

தன்னானே தன்னானே தன்னானே தானனா
தன்னானே தன்னானே னா

என்ன விநோதம் பாரு எவ்வளவு ஜோக்கு பாரு

என்ன விநோதம் பாரு எவ்வளவு ஜோக்கு பாரு
கண்ணைச்சிமிட்டாமே கவனிச்சுப் பாரு பாரு
என். எஸ். கிருஷ்ணனைப் பாரு
டி. ஏ. மதுரம் பாரு
எம். கே. டி. பாகவதர்
எம். கே. ராதா பாரு
டி. ஆர். ராமச்சந்திரன்
டி. ஆர். மகாலிங்கம்
டி. கே. ஷண்முகம் பாரு
வி. கே. ராமசாமி பாரு
டி. எஸ். பாலையா பாரு
டி. எஸ். துரைராஜ் பாரு
மனோஹரன், தங்கவேலு, மைனாவதி, புளிமூட்டை

நம்ப சாரங்கபாணி பாரு, கண்ணாடிக்குள்ளே (சாரங்கபாணி பாரு) அஞ்சலி தேவி பாரு, ஆடும் கமலா பாரு, ராஜகுமாரி பாரு, ராகினியைப் பாருபாரு, பத்மினி, லலிதா பாரு, பானுமதி பாரு, ஸரஸ்வதி முத்துலக்ஷிமி ஸரோஜா பாருபாரு, வைஜயந்திமாலா பாரு, வரலக்ஷிமியை பாரு.

நீ கொடுத்த காசுக்கு சினிமா ஸ்டாருகளை நேருக்கு நேரா பார்த்துஇட்டாச்சு காசு செரிச்சுப் போச்சு.

பங்கஜா, பங்காரு டூயெட்

பங்கஜா : வாழ்வினில் நாமே ஜாலியாகப் போவோம் மலேமேலே

பங்கஜா
பங்காரு } வாழ்வினில் நாமே ஜாலியாகப்போவோம் மலேமேலே
மனம் போல வாழ இந்த மலேயின் வாஸமே—வளரும் நேசமே

பங்காரு : உல்லாஸமாய் கனவான்கள்போலே உயர்வுதான் பெறலாம் பொருளை
முயன்று தேடிடலாம் சினிமா புகழும் சூடிடலாம்

பங்கஜா : ஆசை பலித்திடுமா

பங்காரு: ஆசை பலித்திடுமே

பங்கஜா: அமெரிக்காவிலும் இல்லாத ஸ்டூடியோ அமைத்துப்
படமெடுப்போம்.

பங்காரு : ஹீரோ நான்தானே

பங்கஜா : நானே ஹீரோயின்

இருவரும்: இன்று போல நாம் எந்நாளும் ஒன்றுகூடி வாழுவோம்
அன்பினாலே நாம் மகிழ்ந்து இன்பம் நாடுவோம்

பங்கஜா : நீல வானைப்போலவே நிலேயும் காணுதே—நீர் நிலேயும் காணுதே
மாலே நேரம் தென்றலும் வீச மகிழ்வுண்டாகுதே

பங்காரு : உலக இன்பம் யாவும் இங்கே உதயமாய் உலாவுதே

இருவரும் : இனிய கண்கள் குளிர எங்கும் எழில் நிறைந்து தோணுதே

7

பெண்கள் கோரஸ்

தன்னானே தன்னானே தன்னானே தன
தன்னானே தன்னானே தன்னானே
கூடயிருந்து குடியெக் கெடுத்திட கும்மாளம் போடும் மனுஷரைப் போல்
கோடிப்பயிரைக் கெடுக்கும் களைகளை
கொத்திப்பிடுங்கி எறியுங்கடி
நல்லதும் கெட்டதும் ரெண்டும் கலந்து நடக்கும் உலகத்தை நாம் தெரிஞ்சு
நல்லதைக் கொள்ளணும் கெட்டதை தள்ளணும்
நாடும் மதிக்கணும் ஞானப்பெண்ணே

தன்னானே தன்னானே தன்னானே — தன
தன்னானே தன்னானே தன்னானே.

8

பங்கஜா

அழையாத வீட்டில் நுழையாத சீமான்
அன்பாக வந்தாரடி - என் கண்ணம்மா
என் பாக்யம் என் சொல்லுவேன்
வான் மழைகண்டு மாமயில் ஆடுதல்போல்
நானிருவர் வருகை கண்டு ஆனந்தம் கொண்டேன்
அஞ்சாத வீரர்
அபிமான மிகவே என் உயிர் காத்த தீரர் (அழை)

தொகையரு

பழமையை மறக்க மாட்டார்
பணக்கார பெருமை காட்டார்
உழுதுண்டு வாழ்வ தொன்றே
உயிரெனக் காத்து நின்றார்
தன் பொருள் யார்க்கும் தந்திடமாட்டார்
பிறர் பொருள் மீது ஆசை கொண்டிடமாட்டார்
ஒரு சேதி கேளாய்
ஒரு கோடி பணம் காக்கும் பெருமானடி (அழை)

9

பரதநாட்டியம்

ஸ்வாமி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் ஸாஹித்யம்

சிரிப்புத்தான் வருகுதைய்யா - உலகைக்கண்டால் (சிரி)
எரிப்பினை வைத்துள்ளே இனிப்பாகப் பேசியே
எத்துக்கடையாய் வாழும் பித்தர் கூட்டத்தைக் கண்டால் (சிரி)
பல்லை இளித்துக்காட்டும் பகட்டிற்குக் கொட்டுவார்
பசியென்னும் ஏழையை பரிவின்றித் திட்டுவார்
செல்வம் கொள்ளையடித்து சிறையிலே பூட்டுவார்
திருடர் மிரட்டினாலே திரவு கோலை நீட்டுவார் (சிரி)
நாமே சகலமென்று நாடகம் ஆடுவார்
நாலு தாசரும் பின்னே நாமாவளி போடுவார்
ஏமாளிகளை ஏய்க்கும் கோமாளிக் கூத்துகள்
எத்தனை எத்தனை பித்துலகத்தில் அந்தோ (சிரி)

செம்பாவின் தங்கைகள்

வாங்க வாங்க மாப்பிளே வம்புக்கார மாப்பிளே
வந்த நேரம் நல்ல நேரங்க
வாசனை சந்தணம் பூசுங்க
ஆமாமா
நரி முகத்தில் முழித்திரோ மாப்பிள்ளே
பொன்வயல் மாப்பிளே - பண்ணைக்கார மாப்பிளே
நாட்டுப்புற டுப்புக்கார மாப்பிளே
கல்யாணமானபின்னே பெண்டாட்டி தான்
உம்மையே கைப்பொம்மையாக ஆட்டப்போருள் பாருமே
நல்ல வேட்டி கட்டாத உமக்கினி
பட்டாடையே உடுப்பு
எங்க அக்கா வரும் அதிருஷ்டம் தானுங்க
கொஞ்சம் உட்கார்ந்து யோசிக்க வேணுங்க
கட்டாந்தரை மேலே தூங்கிய உமக்கு
பட்டு மெத்தை மஞ்சம்
ஆம் இனிமேல் பட்டு மெத்தை மஞ்சம் (வாங்க)

செம்பா

பொல்லாத பாவிகள் எல்லாம் நகைக்க
மிக நல்லோர் எல்லாம் தவிப்பதோ
தொல்லை தரும் வீழ் பழிக்காளாகிறோம்
துன்ப வெள்ளம் தனில் சுழலும் துரும்பாகிறோம் உலகில் (பொல்)
கொள்ளையடித்துப் பொருள் சேர்க்கவுமில்லை
கடன்கொண்டு ஒருவரை ஏமாற்றவுமில்லை
உள்ளபடி எவர்க்கும் உபகாரம் செய்ததல்லால்
எள்ளத்தனை கொடுமை செய்ததுமில்லை
கள்ளமில்லாத எங்கள் உள்ளம் தெரிந்துதவும்
வல்லாரில்லையோ - சத்யம் வெல்லாதோ...

சாந்தி பிரஸ், சென்னை - 1.

எமது அடுத்த வெளியீடு
பத்மினி பிக்சர்ஸ்
கல்யாணம் பண்ணியும்
பிரம்மச்சாரி
...திரை உலகிலே ஒரு புதுமை...
டைரக்ஷன்
ப.நீலகண்டன்
மதராஸ் பிக்சர்ஸ்
...வெளியீடு...
பூரண
உரிமையாளர்கள்
மதராஸ்
பிக்சர்ஸ்
சர்க்யூட்
மதராஸ்.14